தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 8, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021,

1990 மார்ச் 22, வியாழக்கிழமை.

1. மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் ...கன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் ...வை கூடியது.

2. மாண்புமிகு பேரவைத் தலைவர் :

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.''

...ஈக வழியில், பிறருக்குக் கொடுக்கும் அளவு அறிந்து ...க்க வேண்டும். அதுவே பொருளைப் போற்றி வாழும் ...றியாகும்.

3. 1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மதுராந்தகம் சர்க்கரை ஆலை.

*914 திரு. எஸ். டி. உகம்சந்த் :

...ண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு ...ளிப்பாரா :

4. (அ) மதுராந்தகம் சர்க்கரை ஆலையில் உற்பத்தியாகும் ...'—யைக் கொண்டு காகித ஆலை துவக்க அரசு திட்டம் ...ள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆலை துவக்கப்படும்?

...ண்பமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

...இல்லை.

தி...

...வினாவிற்கு இடமில்லை.

...ரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் ...களே, மதுராந்தகம் தாலுக்காவானது தொழில் வளர்ச்சியிலே ...தங்கிய பகுதி என்று தமிழக அரசு அறிவித்திருக்கிறது. ...க வானத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயத் ...தொழிலாளர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். கடந்த சில ...ங்களாக அங்கே வறட்சி இருப்பதன் காரணமாக அவர்

களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அப்படிபட்ட சூழ்நிலையில், பின் தங்கிய பகுதி என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதியிலே, பகாசியை மூலப் பொருளாகக் கொண்டு ஒரு காகித ஆலையை அமைக்க வேண்டுமென்ற முறையிலே ஏற்கெனவே திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அதற்காக 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதாக நான் அறிகிறேன். அப்படிப்பட்ட நிலையில் அதைப்பற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த அவர்கள் சார்ந்துள்ள கட்சி ஆட்சியிலே இருந்தபோது, 1980 ஆம் ஆண்டு இது போல ஒரு திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்று கருதி, அதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,500 டன் காகிதம் உற்பத்தியாகக் கூடிய ஒரு தொழிற்சாலையை அங்கே உருவாக்குவதற்கு முயற்சிக்கப்பட்டு அதிலே பல இடையூறுகள்—அந்தக் காகிதம் தரமான காகிதமாக இருக்காது, காரணம் அங்குள்ள சர்க்கரை ஆலைக்குப் பக்கத்திலே காகித ஆலை அமைந்தால் சர்க்கரை ஆலையிலே இருந்து கிளம்புகிற தூசு, தும்புகள் காகித ஆலையைப் பாதித்து, தரமான காகிதம் உற்பத்தியாவதற்கு வழியில்லாமல் போய்விடும் என்று ஆதாரபூர்வமான விளக்கங்கள் கூறப்பட்டு அதற்குப் பிறகுதான் புகளூருக்கு அந்தக் காகித ஆலை மாற்றப்பட்டிருக்கிறது. எனவே, இதைக் குற்றமென்று திரு. உகம்சந்த் அவர்கள் கருதுவார்களேயானால், அது இந்த அரசினுடையதல்ல.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மிக விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்றை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா மட்டும். இது பதில் உரையல்ல. அடுத்து என்ன வினா கேட்கிறீர்கள், அதைக் கேளுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : இன்றையதினம் புகளூரிலே சுமார் 200 கோடி ரூபாய் மூலதனத்தில் காகித ஆலை துவக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மதுராந்தகத்திலே அமைக்க இருப்பது சிறிய அளவிலேதான், இரண்டு கோடி ரூபாய் அளவுக்குத்தான். இது டெஸ்டாக அமைந்திருக்கிறது. எனவே அரசு அதை ஒரு உதாரணமாக வைத்துக் கொண்டு, அதை மீண்டும் பரிசீலனை செய்து, காகிதம் உற்பத்தி செய்கின்ற ஆலையை அங்கே துவக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டத்திலுள்ள மதுராந்தகத்திற்கும், அருகாமையிலே உள்ள தென் ஆற்காடு மாவட்டத்திற்கும் அதிக தொலைவு இல்லை என்று நான் கருது கிறேன். எனவே, தென் ஆற்காடு மாவட்டத்தில் 2 லட்சம் டன் காகிதத்தை உற்பத்தி செய்யக்கூடிய திறன் கொண்ட ஒரு ஆலையை சுமார் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உரு வாக்குவதற்கு இந்த அரசு திட்டம் தயாரித்து, 22–12–1989 அன்று பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இன்றுள்ள மைய அரசோடும் அரசு தொடர்பு கொண் டிருக்கிறது. அந்த ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த மிகப் பெரிய ஆலை அமையுமானால், மதுராந்தகம் சர்க்கரை ஆலையை யும் அதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சர்க்கரை ஆலைகளில் உருவாகின்ற கரும்புச் சக்கையைக் கொண்டு கையால் காகிதம் தயாரிக்கும் தொழிற் சாலைகளை ஆரம்பிக்கலாம். குறிப்பாக, தமிழ்நாட்டில் காகித காக்கி அட்டைகளும், கார்ட் போர்ட் அட்டைகளும் கிடைப்பது கடினமாக இருக்கிறது. இப்போது நெல்லூர் போன்ற இடங் களிலிருந்து அதை நாம் வாங்குகிறோம். எனவே, கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற திட்டம் என்ற வகையில் இதற்கு 10, 15 இலட்சம் ரூபாய் முதலீடுதான் தேவைப்படும். எனவே, Hand made paper mill என்ற பெயரில் கையால் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலைகளை, சர்க்கரை ஆலை உள்ள இடங்களில் அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் வர்களே, அது குறித்து யோசிக்கப்படும்.

9-05 மணி

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர அவர்களே, சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கக்கூடிய பகாஸை காகிதத் தொழிற்சாலைக்கோ அதுபோன்ற வேறு தொழிற் சாலைக்கோ பயன்படுத்த முடியும். தென் ஆற்காடு மாவட்டத்தில் கூட அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை உருவாக இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார் கள். ஆனால் நெல்லிக்குப்பத்தில் இருக்கக்கூடிய ஈ.ஐ.டி. பாரி தொழிற்சாலையில் உற்பத்தி ஆகக்கூடிய பகாஸை பாய்லரில் எரிப்பதற்காகப் போட்டு, அதிலிருந்து கரித்தூள்கள் பரவி உணவுப் பண்டங்களைக் கெடுக்கிறது; கண்களில் விழுந்து கண் ஆபரேஷன் கூட சமீபத்தில் நடந்து இருக்கிறது. இதைத் தடுப்

பதற்கு நீண்ட நாட்களாக முயற்சி செய்தும் முனிசிபாலிட்டியினாலும் முடியவில்லை, அரசாங்கத்தினாலும் முடியவில்லை. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 30 இலட்சம் டன் மேற்படி பகாஸ் உற்பத்தி ஆகிறது. அதிலே சுமார் 7 இலட்சம் டன்தான் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கும் மற்றும் சேஷசாயி பேப்பர் போர்டு போன்ற நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படுகிறது. சுமார் 48 அல்லது 49 ஆயிரம் டன் இதர மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. மீதம் உள்ளவை எல்லாம் நம்முடைய சர்க்கரை ஆலைகளில் நீராவி உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகிறது. அது இப்போது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அதுதான் அவர்கள் சொல்கின்ற அந்த ஆலையிலும் இருக்கின்ற சங்கடம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தச் சர்க்கரை ஆலையின் பக்கத்தில் காகிதம் உற்பத்தி செய்தால், அதனால் கலப்படத்தினால் சங்கடம் ஏற்படும் என்று முதல்வர் அவர்கள் பதில் சொன்னார்கள். புகளூர் பக்கத்தில் சர்க்கரை ஆலையும் காகித ஆலையும் அதற்குப் பக்கத்தில் வேறு ஒரு சர்க்கரை ஆலையும் இருக்கிறது. இதற்கு எந்த ரீதியில் அனுமதி கொடுத்தார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது எல்லா வகையிலும் மதுராந்தகத்திலே உருவாகின்ற சர்க்கரை ஆலையை விட மிகப் பெரிய சர்க்கரை ஆலை என்கின்ற காரணத்தால் அதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு இருக்கிறது.

தலைமைச் செயலகத்தில் இடப்பற்றாக்குறை.

*3529 திரு. ப. காளியப்பன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— :

தலைமைச் செயலகக் கட்டிடத்தின் உள் நடைபாதையில் சிறுசிறு அறைகளாக தடுக்கப்பட்டு வருவது ஏன்? இடப்பற்றாக் குறைக்கு மாற்றுத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?